| விண்ணின் மழைத்துளி – மண்ணின் உயர்துளி | | |
|---|---|---|
| மழைத்துளி சேமிப்பீர் | | குடிநீரை பெருக்குவீர் |

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு விசுவாவசு வருடம் கார்த்திகை மாதம் 9 ஆம் நாள்.25.11.2025ம் தேதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் சாதாரணக்கூட்டம் நகர்மன்ற கூட்ட அரங்கில் நடைபெற உள்ளது. அதுசமயம் கீழ்காணும் பொருள்கள் பற்றி முடிவு செய்யப்படும். மேற்படி கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளும்படி உறுப்பினர்களை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தலைவர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி

1. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான வாகன எண். TN 36 J 2724 (Tipper Lorry) இன் தகுதி சான்று காலம் முடிவடைவதால் இவ்வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை செப்பனிட்டு தகுதி சான்று புதுப்பிக்கும் பணிக்கு நகர்மன்ற தீர்மான எண். 704 நாள்.29.11.2024 இல் மன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளதன் அடிப்படையில், வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை செப்பனிட்டு வழங்கும் பணிக்கு 05.11.2025 தேதியன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எ | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1. | காந்தி மோட்டார்ஸ்,<br>கே.கே. கார்டன், சி.எம்.நகர் ரோடு,<br>கே.கே.எஸ்.கே லெதர் பேக்டரி அருகில்,<br>ஆர்.என்.புதூர்,<br>ஈரோடு – 638 005. | ரூ. 1,33,576/–<br>+<br>GST 18 % உட்பட |
| 2. | ஸ்ரீ வெள்ளிங்கிரி ஆட்டோ ஒர்க்ஸ்,<br>106/4, சங்கரி ரோடு,<br>சீத்தாராம்பாளையம்,<br>நாமக்கல் – 637 209 | ரூ. 1,38,768/–<br>+<br>GST 18 % உட்பட |

மேற்கண்ட விபரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி விலை விகிதம் அளித்துள்ள வரிசை எண்.1 இல் குறிப்பிட்டுள்ள அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனையான M/s. காந்தி மோட்டார்ஸ், கே.கே. கார்டன், சி.எம்.நகர் ரோடு, கே.கே.எஸ்.கே லெதர் பேக்டரி அருகில், ஆர்.என்.புதூர், ஈரோடு – 638 005 என்ற நிறுவனத்தின் விலை விகிதம் மற்றொன்றை விட குறைவாக உள்ளதால் அதனை ஏற்று அந்நிறுவனத்திடம் பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்
3 அவசர அவசியம் கருதி பணி 05.11.2025 அன்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

2. நகராட்சி பகுதியில் சாலைகளில் உள்ள Patches/ Pot Holes சரிசெய்ய வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் Standard Operating Procedure (SOP) 07/10/2025 – ல் வரப்பெற்றது. அதற்கு பின் இந்நகராட்சியில் உள்ள சாலைகள் பள்ளமாக உள்ளதை உடனடியாக சரிசெய்தி தக்க நடவடிக்கைகள் எடுத்திட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களிடம் இருந்து வரப்பெற்ற கடிதத்தின் படி இந்நகராட்சி சாலையில் உள்ள குழிகளை முதற்கட்டமாக 2, 3, 4, 7, 9, 10, 12 மற்றும் 23 ஆகிய வார்டுகளில் 102 இடங்களில் 1068 ச.மீ அளவுகள் (Pot Holes / Patches) கண்டறியப்பட்டு ரூ.9.0 லட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்படுள்ளது. இப்பணியினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் பணிகளின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் அனுமதி பெற்று 25.11.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொண்மைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

3. கோபிசெட்டிபாளையம் நகராட்சி ஆரம்பபள்ளியில் (நாயக்கன்காடு) குடிநீர் வசதி, மின்விளக்கு வசதி, கழிவறைகள், வகுப்பறைகள் மற்றும் வளாகம் உள்ளிட்ட பல்வேறு உட்கட்டமைப்புகளின் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மேற்படி பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ 5.இலட்சம் ஆகும். இப்பணியினை நகராட்சி கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. மேற்கண்ட செலவீனத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்

4. கோபிசெட்டிபாளையம் நகராட்சி வார்டு எண் 19ல் உள்ள வேங்கம்மையார் ஆரம்பப்பள்ளியில் குடிநீர் வசதி, மின்விளக்கு வசதி, கழிவறைகள், வகுப்பறைகள் மற்றும் வளாகம் உள்ளிட்ட பல்வேறு உட்கட்டமைப்புகளின் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மேற்படி பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ 5.இலட்சம் ஆகும். இப்பணியினை நகராட்சி கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. மேற்கண்ட செலவீனத்தை நகராட்சி கல்வி நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்

5. கோபிசெட்டிபாளையம் நகராட்சி ஆரம்பபள்ளியில் (மொடச்சூர்) குடிநீர் வசதி, மின்விளக்கு வசதி, கழிவறைகள், வகுப்பறைகள் மற்றும் வளாகம் உள்ளிட்ட பல்வேறு உட்கட்டமைப்புகளின் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மேற்படி பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ 5.00 இலட்சம் ஆகும். இப்பணியினை நகராட்சி கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. மேற்கண்ட செலவீனத்தை நகராட்சி கல்வி நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்

6. கோபிசெட்டிபாளையம் நகராட்சி வார்டு எண் 27ல் உள்ள வேங்கம்மையார் உயர்நிலைப்பள்ளியில் குடிநீர் வசதி, மின்விளக்கு வசதி, கழிவறைகள், வகுப்பறைகள் மற்றும் வளாகம் உள்ளிட்ட பல்வேறு உட்கட்டமைப்புகளின் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மேற்படி பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ 5.00 இலட்சம் ஆகும். இப்பணியினை நகராட்சி கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. மேற்கண்டசெலவீனத்தை நகராட்சி கல்வி நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்

7. கோபிசெட்டிபாளையம் நகராட்சி மேல்நிலை பள்ளியில் (மொடச்சூர்) குடிநீர் வசதி, மின்விளக்கு வசதி, கழிவறைகள், வகுப்பறைகள் மற்றும் வளாகம் உள்ளிட்ட பல்வேறு உட்கட்டமைப்புகளின் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மேற்படி பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ 5.00 இலட்சம் ஆகும். இப்பணியினை நகராட்சி கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. மேற்கண்ட செலவீனத்தை நகராட்சி கல்வி நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்

8. கோபிசெட்டிபாளையம் நகராட்சி நடுநிலை (நகரம்) தினசரி மார்க்கெட் பகுதியில் உள்ள பள்ளியில் குடிநீர் வசதி, மின்விளக்கு வசதி, கழிவறைகள், வகுப்பறைகள் மற்றும் வளாகம் உள்ளிட்ட பல்வேறு உட்கட்டமைப்புகளின் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மேற்படி பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகைரூ 5.00 இலட்சம் ஆகும். இப்பணியினை நகராட்சி கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. மேற்கண்ட செலவீனத்தை நகராட்சி கல்வி நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்

9. கோபிசெட்டிபாளையம் நகராட்சி வார்டு எண் 15ல் உள்ள ஆண்கள் மேல்நிலை பள்ளியில் குடிநீர் வசதி, மின்விளக்கு வசதி, கழிவறைகள், வகுப்பறைகள் மற்றும் வளாகம் உள்ளிட்ட பல்வேறு உட்கட்டமைப்புகளின் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மேற்படி பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ 5.00 இலட்சம் ஆகும். இப்பணியினை நகராட்சி கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. மேற்கண்ட செலவீனத்தை நகராட்சி கல்வி நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்

10. கோபிசெட்டிபாளையம் நகராட்சி வார்டு எண் 2ல் உள்ள ஜெயராம் நடுநிலை பள்ளியில் குடிநீர் வசதி, மின்விளக்கு வசதி, கழிவறைகள், வகுப்பறைகள் மற்றும் வளாகம் உள்ளிட்ட பல்வேறு உட்கட்டமைப்புகளின் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மேற்படி பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ 5.00 இலட்சம் ஆகும். இப்பணியினை நகராட்சி கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. மேற்கண்ட செலவீனத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்

11. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பெண்கள் மேல்நிலை பள்ளியில் குடிநீர் வசதி, மின்விளக்கு வசதி, உள்ள கழிவறைகள், வகுப்பறைகள் மற்றும் வளாகம் உள்ளிட்ட பல்வேறு உட்கட்டமைப்புகளின் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மேற்படி பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ 5.00 இலட்சம் ஆகும். இப்பணியினை நகராட்சி கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. மேற்கண்ட செலவீனத்தை நகராட்சி கல்வி நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்

12. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் கடித ந.க.எண். 3935 / 2021/ பி1 நாள். 30.10.2025 ன் படி இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகளில் மக்கும் குப்பை மக்காத குப்பை பிரித்தல், பிளாஸ்டிக் ஒழிப்பு, மஞ்ச பை பயன்படுத்துதல், வரியை நகராட்சிக்கு உரிய நேரத்தில் செலுத்துதல் ஆகிய தலைப்புகளில் நகரின் முக்கிய பகுதிகளான பேருந்து நிலையம், தினசரி மார்க்கெட், பாரியூர் ரோடு, கடை வீதிகள் ஆகிய நான்கு இடங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தியமைக்கு சிவசக்தி கிராமிய கலைக்குழு இயக்குநர் V.N. ராணி, வள்ளலார் குடில், வள்ளலார் சாலை, சாய்ராம் நகர், விருத்தச்சலாம், கடலூர் அவர்களுக்கு தொகை ரூ. 20,000/- செலவினம் மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
(ந.க.எண். 648 /2025/எச்1)

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

13. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான காலியாக உள்ள கடைகளுக்கு 07.11.2025 ஆம் தேதியன்று பொது (ம) மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி கடைகளுக்கு நடைபெற்ற பொது (ம) மறு ஏலத்தில் கலந்து கொள்ள யாரும் முன்வரவில்லை.

IUDP மோர் மார்க்கெட் கடை எண் 10 க்கு மட்டும் இரண்டு நபர்கள் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டனர். அதன் விபரம் பின்வருமாறு

| வ.எண் | கடையின் விபரம் | ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர் விபரம் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|
| 1 | IUDP மோர் மார்க்கெட் கடை எண் 10 | திரு.K.வேலுச்சாமி<br>த/பெ. P.R.குப்புச்சாமி<br>7/3, குப்பாண்டார் வீதி–4,<br>புதுப்பாளையம்,கோபிசெட்டிபாளையம். | **ரூ.8,600/–** |
| | | திரு.M.மணிகண்டன்<br>த/பெ. முருகன்<br>19, குப்பாண்டார் வீதி–5,<br>கோபிசெட்டிபாளையம். | **ரூ.8,500/–** |

வரிசை எண் 1 இல் கண்டுள்ள, IUDP மோர் மார்க்கெட் கடை எண். 10 க்கு திரு.M.மணிகண்டன் என்பவர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ,8,500/– ஐ விட கூடுதலாக ரூ.100/– சேர்த்து திரு.K.வேலுச்சாமி என்பவர் ரூ.8,600/–க்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை குறிப்பிட்டுள்ளார்.

எனவே, மேற்கண்ட விபரங்களின் அடிப்படையில், IUDP மோர் மார்க்கெட் கடை எண். 10 கடைக்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.8,600/– குறிப்பிட்டுள்ள திரு.K.வேலுச்சாமி த/பெ. P.R.குப்புச்சாமி என்பவருக்கு கடை ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும் ஏலம் போகாத மீதமுள்ள கடைகளுக்கு மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 1567/2018/அ3)

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

14. இந்நகராட்சி பகுதியில் வடகிழக்கு பருவமழையின் காரணமாக கால்வாய்கல் மற்றும் மழைநீர் வடிகால்கள் ஆகியவற்றில் ஏற்படும் அடைப்புகளை சரிசெய்து அவ்வப்போது ஏற்படும் இயற்கை சீற்றங்களை JCB வாகனம் கொண்டு சுத்தம் செய்து அகற்றும் பணிக்கு நகர்மன்ற தீர்மான எண். 1359 நாள். 30.10.2025 இல் மன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளதன் அடிப்படையில், JCB வாகனம் மூலம் பணிகளை மேற்கொள்ளும் பணிக்கு 12.11.2025 தேதியன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எ | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1. | N. லோகநாதன்,<br>முத்துமஹால் அருகில்,<br>சத்தி மெயின் ரோடு,<br>கோபிசெட்டிபாளையம் – 638452. | ரூ. 1100/–<br>(ஒரு மணி நேரத்திற்கு) |
| 2. | ஸ்ரீ பாலமுருகன் எர்த் மூவர்ஸ்<br>5/140 பச்சைமலை ரோடு,<br>கோபிசெட்டிபாளையம் – 638 476 | ரூ. 1175/–<br>(ஒரு மணி நேரத்திற்கு) |

மேற்கண்ட விபரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி விலை விகிதம் அளித்துள்ள வரிசை எண்.1 இல் குறிப்பிட்டுள்ள N. லோகநாதன், முத்துமஹால் அருகில், சத்தி மெயின் ரோடு, கோபிசெட்டிபாளையம் – 638452 அவர்களின் விலை விகிதம் மற்றொன்றை விட குறைவாக உள்ளதால் அதனை ஏற்று அந்நிறுவனத்திடம் பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.கஎண்.2638/2025/எச்1)

அலுவலகக்குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்
3 அவசர அவசியம் கருதி பணி 12.11.2025 அன்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்

15. Health and Family welfare Department கடிதம் ந.கஎண் 5547/P1/205-2 தேதி:24.9.200508 2025-26 ஆம் ஆண்டில் தொற்றா நோய்களை தவிர்க்கவும் மற்றும் கட்டுப்படுத்தவும் ஆரோக்கியமான வாழ்கை முறைபை மேம்படுத்தவும் "நடப்போம்நலம் பெறுவோம்" திட்டம் அனைத்து மாவட்டங்களிலும். செயல்படுத்தப்பட்டு வருகிறது இத்திட்டத்தின் கீழ் உள்ளாட்சி அமைப்புகள் "Seating arrangements" செய்ய வேண்டும் என்று கோரியுள்ளனர். எனவே8இடங்களில்(வார்டு எண்: 7,9,10,11) Stone bench அமைக்க ஆகும் உத்தேச மதீப்பீடு தொகை ரூ 90,000/-ஆகும். இப்பணியினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது .

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. மேற்கொண் செலவீனத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்

16. கோபிசெட்டிபாளையம் நகராட்சி சொந்தமான MUDF பழைய பேருந்து நிலைய வணிக வளாக கட்டிடத்தினை இடித்து விட்டு புதிய வணிக வளாகம் கட்டுவதற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி வணிக வளாக கட்டிடத்தில் செயல்பட்டு வரும் கடைகளை காலி செய்ய சம்மந்தப்பட்ட கடை குத்தகைதாரர்களுக்கு இந்நகராட்சி மூலம் 30.06.2025 ஆம் தேதி அறிவிப்பு அனுப்பப்பட்டதில், அவ்வறிவிப்பிற்கு எதிராக திரு.N.சென்னியப்பன், திரு.G.Aஅமானுல்லா மற்றும் திரு.K.இளங்கோவன் ஆகிய மூவரால் ஆணையர் கோபிசெட்டிபாளையம் நகராட்சி அவர்களுக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றத்தல் W.P.No.30915/2025, 30919/2025 மற்றும் 30921/ 2025 இன் படி வழக்கு தொடரப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கில் கோபிசெட்டிபாளையம் நகராட்சியின் சார்பாக சென்னை உயர்நீதிமன்ற சிறப்பு அரசு வழக்கறிஞர் டாக்டர்.டி.ஸ்ரீனிவாசன் அவர்கள் ஏற்று நடத்துவதற்கும், அதற்காகும் வழக்கு கட்டணமாக செலுத்தகோரியும் வழக்கறிஞரால் 06.11.2025 ஆம் நாளிட்ட கடிதத்தில் வழக்காடல் கட்டணமாக ரூ.25000/-ஐ வழங்க கோரப்பட்டது. அச்செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து செலவு செய்திட மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண். 1599/2025/அ1)

அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.

17. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் 2025–2026ல் கீழ்க்கண்ட பணிகளை செய்வதற்கு 14.11.2025 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலையின்பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்பெயர் விவரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான தினசரி பூ அங்காடி பிளாக்–இல் உள்ள பழைய கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளுதல். | 4,20,000 | SRI CHITHRA CONSTRUCTION ஒப்பந்ததாரர் | 16.82% சதவீதம் மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட குறைவு |
| | | | SHRI AMIRTHA BUILDERS ஒப்பந்ததாரர் | 12.89% சதவீதம் மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட குறைவு |

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள SHRI AMIRTHA BUILDERS ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

18. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10 இல் மின் நகர் பூங்காவிற்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் உள்ள கிணற்றில் பொது உபயோகத்திற்காக மேல் நிலை தண்ணீர் தொட்டி சொந்த செலவில் கட்டி பராமரித்து வருகின்றார்கள்.மனைபிரிவு சாலைகள், பூங்கா பொது இடங்கள், நகராட்சி கொண்ட ஆவண எண் 1767/1994–ன் படி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், மேல் நிலை தண்ணீர் தொட்டிக்கு தண்ணீர் ஏற்றப்படும் மின் மோட்டர் மின் மோட்டர் மின் இணைப்பை ( மின் இணைப்பு எண். 306 –008–9) ஆணையாளர், கோபிசெட்டிபாளையம் நகராட்சி என்ற பெயரில் மாற்றம் செய்து கொடுக்க குடியிருப்போர் நல சங்கம் சார்பில் கோரியுள்ளீர்கள். எனவே, மேற்கண்ட மின் இணைப்பை ஆணையாளர் கோபிசெட்டிபாளையம் நகராட்ச என்ற பெயரில் மாற்றம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

மன்றம் அனுமதி அளிக்கலாம்.

19. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வீரபாண்டி கிராமம் வார்டு D பிளாக் 20, நகரளவை எண்.32, சர்வே எண்.248/Bpt, 249/Apt இல் உள்ள 10,000 ச.மீ (2.475 ஏக்கர்) காலியிடத்தினை விரிவு அபிவிருத்தி திட்டத்தில் விவசாய பகுதியாக உள்ளதை குடியிருப்பு பகுதியாக மாற்றம் செய்து தருமாறு 20.04.2022 ஆம் நாளிட்ட திரு.K.பொன்னுசாமி மற்றும் திருமதி.ராஜம்மாள் ஆகியோரால் கோரப்பட்டுள்ளது. மேலும், மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் ஈரோடு, அவர்களது கடிதம் ந.க.எண். 406/2025/ஈமா2 நாள் 14.07.2025 இன் படி கோபிசெட்டிபாளையம் நகர்மன்ற தீர்மானம் எண் 141 நாள் 30.06.2022 திருத்திய தீர்மானம் நிறைவேற்றி தருமாறு கோரப்பட்டுள்ளது.

இந்நகராட்சியில் 24.11.1982 ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்ட மாற்றம் செய்யும் பொருட்டு அரசு ஆணை எண்.485 நாள்.04.06.1990 இல் வீட்டுவசதி வாரிய துறையால் தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 32(3) (15) மற்றும் பிரிவுகள் 32 (2c) இன் படி திருத்திய விரிவு

அபிவிருத்தி திட்டம் 2011 (Modified Master Plan Land Use 2011) 1995, ஆம் ஆண்டு இறுதி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்காணும் பகுதியில் உள்ள வார்டு D பிளாக் 20 நகரளவை எண்.32 நகராட்சி வார்டு எண். 18 கரட்டூர் பாரதி வித்யாலயா பள்ளி அருகில் 10,000 ச.மீ (2.475 ஏக்கர்) இடமானது அங்கீகரிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.7 இன் படியும் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின் படியும் விவசாய பகுதியாக (Agriculture) வகைப்படுத்தப்பட்டுள்ளது. மனையிடத்திற்கு அணுகுபாதை 15.20 மீ அகலமுள்ள சாலை உள்ளது. மனையிடத்தின் வடபுறம் 15.20 மீ அகலமுள்ள சாலையும், தென்புறத்தில் பச்சைமலை நாதன் நகர் எனும் பெயரில் குடியிருப்பு பகுதியும் கிழபுறம் மானாவாரி நிலங்களும் மேற்குபுறத்தில் விவசாயம் அல்லாத பூமியாகவும் அமைந்துள்ளது.

மனையிடத்தினை சுற்றியும் வரையறுக்கப்படட தூரத்திற்குள், ஆறு, ஏரி, குளம் மற்றும் குட்டை போன்ற நீர்நிலைகள் ஏதும் அமையவில்லை. மேலும். சுடுகாடு, இடுகாடு ஆகியவைகள் அமையப்பெறவில்லை எனவே மேற்காணும் விவரங்களின் அடிப்படையில் மனுதாரருக்கு சொந்தமான 10.000 ச.மீ (2.475 ஏக்கர்) நிலத்தினை விவசாய உபயோகத்திலிருந்து குடியிருப்பு உபயோகப்பகுதியாக நில உபயோக மாற்றம் செய்து தர மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் ஈரோடு, மற்றும் நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது. (ந.க.எண்.847/2022/எப்1)

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்

20. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வீரபாண்டி கிராமம் வார்டு D, பிளாக் –17, நகரளவை எண்கள் 9/1,9/3,10/1,24/1,24/3,25/1 மற்றும் 26/3 இல் 1.96 ஏக்கர் ( 7892 சதுர மீட்டர்) பரப்பளவில் அமையும் காலியிடத்தில் 34 மனைகள் கொண்ட குடியிருப்பு மனைப்பிரிவாக அமைக்க நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களுக்கு இணைய வழி எண்.VLJWSFKO/2025/TCP Dated.28.07.2025 –இன் படி இணைய வழியாக அனுமதி கோரி திரு.VRR சென்னியங்கிரி மற்றும் T.பழனிசாமி ஆகியோரால் விண்ணப்பிக்கப்பட்டது. இதனையடுத்து நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் ஈரோடு அவர்களின் மனைப்பிரிவு திட்ட அனுமதி ந.க.எண்.SWP/DTCP/ERODE/LAYOUT/APPROVAL NO.234/2025 நாள்.28.07.2025 என எண்ணிடப்பட்டு திட்ட அனுமதி வழங்கி மனுதாரருக்கு அனுப்பப்பட்டும் இதன் மீது இறுதி ஒப்புதல் வழங்கும் பொருட்டு உரிய மேல் நடவடிக்கை தொடர கோரி நகர ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களால் அதன் நகல் இவ்வலுவலகத்திற்கும் அனுப்பப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து மனுதாரரால் சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகளை நகராட்சிக்கு தானக்கிரயமாக ஆவண எண்.2296/2025 இன் படியும் தமிழ்நாடு மின்சார வாரியத்துக்கு இடம் ஒதுக்கீடு செய்து இந்நகராட்சிக்கு தானக்கிரய ஆவண எண்.2297/2025 நாள்.14.07.2025 இன் படியும் நெ.1, இணை சார் பதிவாளர் அலுவலகம், கோபிசெட்டிபாளையம், அலுவலகத்தில் பதிவு செய்து அதன் அசல் ஆவணங்களை மனுதாரரால் நகராட்சிக்கு வழங்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து, சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகளை வரைபடத்தில் குறிப்பிட்டவாறு மனுதாரால் பணிகள் மேற்கொள்ளப்பட்டு தரமானதாக உள்ளதா என்பதை கண்டறிந்து, சான்று வழங்க கோரி பொறியியல் பிரிவுக்கு அனுப்பப்பட்டது. இதனையடுத்து, பொறியியல் பிரிவில் கீழ்காணும் விவரப்படி குறிப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவில் சாலை அமைத்தல், குடிநீர் விநியோக குழாய் பதித்தல், மழைநீர் நீர் வடிகால் அமைத்தல், மின் கம்பம் நட்டு தெருவிளக்கு பொருத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ள கோரி மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி பணிகளை மேற்கொண்டு 12.11.2025 ஆம் நாளிட்ட பொறியாளர் குறிப்பில் மேறப்டி மனைப்பிரிவில் மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டுள்ளது

என்றும் இச்சாலையானது நகராட்சி சாலையுடன் இணைக்கப்பட்டுள்ளது என்றும் குடிநீர் விநியோக குழாய்கள் மேற்படி மனைப்பிரிவில் பதிக்கப்பட்டுள்ளதாகவும் ஏற்கனவே உள்ள விநியோக குழாய் இணைப்பு மற்றும் உள் இணைப்பு அப்பகுதி குடிநீர் குழாய் விநியோக மேம்பாட்டுப் பணிகள் மேற்கொண்டு அதன் பின்பு தான் இணைப்பு வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், மேற்காணும் பணிகளுக்கு ஈரோடு அரசு பொறியியல் கல்லூரி அவர்கள் கடிதம் நாள்.17.10.2025 இன் படி மூன்றாம் நபர் தரச்சான்று பெறப்பட்டுள்ளது என்றும் மேற்காணும் பணிகள் நல்ல முறையில் முடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மனுதாரர் மேற்படி மனைப்பிரிவில் பிரிக்கப்பட்ட மனையிடங்கள் அனைத்திற்கும் தனித்தனியாக, உட்பிரிவு எண்ணிடப்பட்டு மனுதாரர் பெயருக்கு உட்பிரிவு செய்தும், சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகளுக்கு ஆணையாளர் கோபிசெட்டிபாளையம் நகராட்சி என்ற பெயரில் உட்பிரிவு செய்தும் மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கும் தனியாக உட்பிரிவு செய்தும், நகரளவை ஆவணங்களில் வட்டாசியர் கோபிசெட்டிபாளையம் வட்டம் அவர்களின் நடவடிக்கைகள் டி.ஆர்.எண்.2025/10/31/000750SD நாள்.07.11.2025 அன்று வட்டாட்சியர் அவர்களால் உத்தரவிடப்பட்டு அதன் நகல்கள் சமர்பிக்கப்பட்டுள்ளது. மேலும் இம் மனைப்பிரிவிற்கு கம்பங்கள் அமைக்க தமிழ்நாடு மின் வாரியம் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளவும் அதற்கான மதிப்பீட்டு தொகையை ஆணையாளர் பெயரில் செலுத்தவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மனைப்பிரிவிற்கான கட்டணங்கள் கீழ்கண்டவாறு மனுதாரரால் 15.11.2025 இல் நகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | மனைப்பிரிவு அனுமதி கட்டணம். | ரூ. 1,.00.000/- |
| 2. | மனைப்பிரிவு அங்கீகார கட்டணம். | ரூ. 68.000/- |
| 3. | மனை அபிவிருத்தி கட்டணம். | ரூ. 48.000/- |
| 4. | நில உபயோக மாற்று கட்டணம். | ரூ. 65,000/- |
| 5. | மனைப்பிரிவு வைப்பு தொகை. | ரூ. 2,00.000/- |
| 6. | நில உபயோக மாற்று கட்டணம் நகராட்சி கணக்கில் | ரூ. 30,000/- |
| 7 | விளம்பர பலகை கட்டணம் | ரூ. 10,000/- |
| 8 | மழை நீர் சேகரிப்பு கட்டணம் | ரூ. 1.02.000/- |
| 9 | கொடி நாள் கட்டணம் | ரூ. 34,000/- |

எனவே, மேற்காணும் விபரங்களின் அடிப்படையிலும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களின் தொழில்நுட்ப ஒப்புதலின் பேரிலும் 12.11.2025 ஆம் நாளிட்ட பொறியியல் பிரிவு குறிப்பின் படியும், வீரபாண்டி கிராமம் வார்டு –D, பிளாக் – 17, நகரளவை எண்கள் 9/1,9/3,10/1,24/1, 24/3,25/1, மற்றும் 26/3 இல் 1.96 ஏக்கர் ( 7892 சதுர மீட்டர்) பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு SWP/DTCP/ERODE/LAYOUT/APPROVAL NO.234/2025 என எண்ணிடப்பட்டு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் ஈரோடு அவர்களின் தொழில்நுட்ப ஒப்புதலில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டும் நகராட்சியால் தெரிவிக்கப்படும் விபரங்களுக்கு உட்பட்டும் இறுதி மனைப்பிரிவு ஒப்புதல் வழங்க மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது. (ந.க.எண்.447/2025/எப்1)

21. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட 3 MCC மையத்தில் 2 MCC யின் ( ராமர் எக்ஸ்டென்சன் 4 MT, கரட்டூர் MCC – 2 MT ) இயந்திரம் சரிவர குப்பையை அரைக்க இயலாத நிலை உள்தால் 2 MCC யின் அரைக்கும் இயந்திரத்தினை முற்றிலுமாக மாற்றி அமைக்கவும், 3 MT கொள்ளளவு கொண்ட கரட்டூர் MCC யின் பிளேடுகளை சரிசெய்து பழுது பார்க்கும் பணிக்கு நகர்மன்ற தீர்மான எண். 1298 நாள். 31.07.2025 இல் மன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளதன் அடிப்படையில், இயந்திரத்தினை முற்றிலுமாக மாற்றி பொருத்தி தரும் பணிக்கு 05.08.2025ம் தேதியன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எ | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1. | Sri.Krishna Agencies,<br>3, Bazaar Street,<br>Sathyamangalam – 638 401 | ரூ.4,48,000./–<br>+<br>(GST உட்பட) |
| 2. | S & G Solutions<br>No. 1/B, Indira Nagar.<br>Ondiputhur,<br>Coimbatore – 641 016 | ரூ. 5,60,000/–<br>+<br>(GST உட்பட |

மேற்கண்ட விபரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள வரிசை எண். 1 இல் குறிப்பிட்டுள்ள Sri Krishna Agencies, 3 Bazaar Street, Sathyamangalam – 638 401 அவர்களின் விலை விகிதம் மற்றொன்றை விட குறைவாக உள்ளதால் அதனை ஏற்று அந்நிறுவனத்திடம் பணியினை மேற்கொண்டமைக்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.களண்.958/2025/எச்1)

அலுவலகக் குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3 அவசர அவசியம் கருதி பணி 05.08.2025 அன்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்

22. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் 2025–2026ல் கீழ்க்கண்ட பணிகளை செய்வதற்கு 14.11.2025 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விவரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான பஸ் நிலையம் மற்றும் பாரியூர் ரோடு பகுதியில் உள்ள ஹைமாஸ் லைட்டுகளில், SV லைட்டுகளுக்கு பதிலாக 150W மற்றும் 200W LED லைட்டுகளாக மாற்றி அமைக்கும் பணி மேற்கொள்ளுதல். | 2,00,000 | M/S P&B ENTERPRISES ஒப்பந்ததாரர் | 0.20% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/S JPC NAMAKKAL ஒப்பந்ததாரர் | 1.20% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/S P&B ENTERPRISES ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

23. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் 2025–2026ல் கீழ்க்கண்ட பணிகளை செய்வதற்கு 14.11.2025 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விவரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான 30 – வார்டுகளில் 20W மற்றும் 90W LED லைட்டுகளை சப்ளை செய்து பொருத்தும் பணி மேற்கொள்ளுதல். | 7,87,000 | M/S P&B ENTERPRISES ஒப்பந்ததாரர் | 0.27% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/S JPC NAMAKKAL ஒப்பந்ததாரர் | 0.45% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/S P&B ENTERPRISES ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்

24. இந்நகராட்சிக்கு உட்பட்ட பொதுசுகாதார பிரிவின் கீழ் தினசரி உருவாகின்ற 18 MT குப்பையில் 12 MT மக்கும் குப்பையை நகராட்சி பகுதியில் உள்ள 3 – MCC மையத்தில் உரமாக்கப்பட்டு விவசாயத்திற்கு வழங்கப்பட்டு வருகிறது. மேலும், தினமும் சேகரமாகும் பிளாஸ்டிக் மற்றும் எரியும் தன்மையுடைய கழிவுகள் (சிமெண்ட் ஆலைகளின் மாற்று எரிபொருள் பயன்பாட்டிற்கு உகந்த) அனைத்தும் இந்நகராட்சியின் RRC மையங்களில் சேமித்து வைத்து அக்கழிவுகள் அவ்வப்போது தேக்கமின்றி திடக்கழிவு, பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள் 2016 –ன் படி சிமெண்ட் ஆலைகளுக்கு அனுப்பபட்டு வருகிறது . இந்நிலையில் 2 MT கொள்ளவு கொண்ட Incinerator Machine ( எரியூட்டும் கருவி) நுண்ணுர செயலாக்க மையத்தில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி இயந்திரத்தின் Conveyer Belt மற்றும் எரிபொருட்களை கொட்டும் பெரிய அளவிலான இரும்புக்குழாய் பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. எனவே, தினமும் உருவாகும் 2000 கிலோ கழிவுகளை எரிக்க வேண்டிய அவசியம் உள்ளதால் அவசர அவசியம் கருதி பழுதுநீக்கம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ. 1.75 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.( ந.க.எண். 2776 /2025/எச்1)

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2 இதற்காகும் செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

25. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் 2025-2026ல் கீழ்க்கண்ட பணிகளை செய்வதற்கு 17.11.2025 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விவரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் குடிநீர் விநியோக பராமரிப்பு பணிக்கு வெளிமுகமை (Out Sourcing) மூலம் 24 நபர்களை பணியமர்த்துதல் | 18,70,000 | S.SARAVANAN ஒப்பந்ததாரர் | 0.75% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| | | | M/s MAYURA ENVIRONTECH PRIVATE LIMITED ஒப்பந்ததாரர் | -0.19% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/s MAYURA ENVIRONTECH PRIVATE LIMITED ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

26. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதியில் உள்ள 49 பாகங்களின் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் அவரவர்களுக்குரிய பாகங்களுக்கான சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பான பூர்த்தி செய்து பெறப்பட்ட SIR படிவங்களில், விடுப்பட்ட 2002 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் தேர்தல் விபரங்களை இணைய வழியில் தேடுதல் (Searching) மற்றும் அனைத்து படிவங்களின் விபரங்களையும் வாக்குச்சாவடி நிலை அலுவலர் APP மூலம் பதிவேற்றம் (Digitilised) செய்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட, தேவையான கணினிகளை வாடகைக்கு எடுத்து அதற்கான High Speed Internet Connection -ஐ பெற்று, Data Entry பணிகளை மேற்கொள்ள தேவையான தன்னார்வளர்களை நியமித்து, அவர்களுக்கான வருகை பதிவுகளை மேற்கொள்ளுதல் மற்றும் தன்னார்வலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் நிர்ணயம் செய்துள்ள தொகைகளை நாள் ஒன்றுக்கு என கணக்கிட்டு ஊதியத்தினை வழங்கவும், தேர்தல் பணியில் ஈடுபடும் Data Entry Operator - கள் மற்றும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுடன் உதவியாக செல்லும் கொசு ஒழிப்பு பணியாளர்களுக்கு உணவு மற்றும் சிற்றுண்டிகள் வழங்குவதற்கும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.5,00,000/-ஐ நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.656/2021/எப்1)

அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.

27. இந்நகராட்சியின் 2025 -2026 ஆம் ஆண்டிற்கு தேவையான எழுதுபொருட்கள் மற்றும் அதன் தொடர்புடைய பொருட்களை கொள்முதல் செய்ய ஏற்கனவே நகர்மன்ற தீர்மான எண்.1156 நாள்.15.05.2025 இல் ரூ.3.00 இலட்சத்திற்கு அனுமதி பெறப்பட்ட நிலையில், தற்போது தேர்தல் பணி மற்றும் திட்ட அறிக்கைகள் போன்ற பல்வேறு பணிகளுக்கான அறிக்கைகள் தயார் செய்ய அதிகப்படியான எழுதுபொருட்கள், பேப்பர்கள் மற்றும் இதர பதிவேடுகள் தேவைப்படுகிறது. எனவே,

கூடுதலாக ரூ.5.00 இலட்சத்திற்கு பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ந.க.எண்.548/2025/டி2

அலுவலக குறிப்பு:– மன்றம் அனுமதிக்கலாம்.

28. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு SBM 2.0 திட்டத்தின் மூலம் 10438 MT மரபுவழி குப்பைகள் Biomining முறையில் அகற்றுவதற்கு ரூ.74.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் செயல்முறை ஆணை ந.க.எண்.74/2025/SBM–1 நாள்.19.11.2025 இல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு செலவினம் கீழ்கண்டவாறு மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி செலவினத்தில் நகராட்சி பங்குத்தொகை ரூ.26.69 லட்சம் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

Total Cost : ரூ. 74,00,000
Transportation Charges : ரூ. 17,00,000
Biomining Cost : ரூ. 57,00,000

| மத்திய அரசு பங்களிப்பு | மாநில அரசு பங்களிப்பு | நகராட்சி பங்களிப்பு | மொத்த திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|
| ரூ. 28.50 இலட்சம் | ரூ. 18.81 இலட்சம் | 26.69 இலட்சம் | 74.00 இலட்சம் |

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. மேற்கண்ட செலவீனத்தில் நகராட்சி பங்களிப்பு நிதியை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

29. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு SBM 2.0 2025–2026 திட்டத்தின் கீழ் வார்டு எண்.30 செங்கோட்டையன் காலனியில் புதிய சமுதாய கழிப்பிடம் கட்டுவதற்கு SBM திட்டத்தின் கீழ் 10 வது மாநில உயர்மட்ட குழுவின் கூட்டம் 15.10.2025 அன்று ரூ.18.00 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு செலவினத்தொகை கீழ்கண்டவாறு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| மொத்த மதிப்பீட்டு தொகை | : | ரூ.18.00 இலட்சம் |
| மத்திய அரசு நிதி | : | ரூ.9.00 இலட்சம் |
| மாநில அரசு நிதி | : | ரூ.5.90 இலட்சம் |
| நகராட்சி நிதி | : | ரூ. 3.10 இலட்சம் |

மேற்படி பணியின் செலவினத்தில் நகராட்சி பங்களிப்பு தொகை ரூ.3.10 இலட்சம் நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.

30. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணி, பள்ளி கழிவறை தூய்மை பணி மற்றும் கொசு ஒழிப்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள நிரந்தர மற்றும் ஒப்பந்த தூய்மை பணியாளர்களுக்கு முதலமைச்சரின் காலை உணவு வழங்க ஏதுவாக ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொண்டு உணவு வழங்குநரை (Service Providers) கண்டறிந்திட தக்க நடவடிக்கை எடுத்திட

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் செயல்முறை ஆணை எண்.29143/2025/எச்3, நாள்.05.11.2025 இல் வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் கீழ்கண்டவாறு தூய்மை பணியாளர்கள், ஓட்டுநர்கள் மற்றும் கொசு ஒழிப்பு பணியாளர்கள் ஆகிய 262 பணியாளர்களுக்கு ஒரு எண்ணிக்கையிலான வாகனத்தைக் கொண்டு காலை உணவு கீழ்கண்ட 5 இடங்களில் விநியோகித்திட திட்டமிடப்பட்டு ஒப்பந்தப்புள்ளி 07.11.2025 அன்று TNtenders இல் வலைதளத்தில் கோரப்பட்டது. 21.11.2025 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட உள்ளது.

1. பணியாளர் விபரம்

| பணியாளர்களின் வகைப்பாடு | எண்ணிக்கை |
|---|---|
| கொசு ஒழிப்பு பணியாளர்கள் | 37 |
| நிரந்திர மற்றும் ஒப்பந்த ஓட்டுனர்கள் | 18 |
| நிரந்திர தூய்மை பணியாளர்கள் | 54 |
| ஒப்பந்த தூய்மை பணியாளர்கள் | 134 |
| பள்ளி கழிப்பிட பராமரிப்பு பணியாளர்கள் | 19 |
| மொத்த பணியாளர்கள் | 262 |

2. உணவு விநியோகம் செய்திடும் இடங்கள்

| வ. எண் | வார்டு எண் | உணவு விநியோகிக்கப்படவுள்ள இடம் | வார்டுகளின் விபரம் | தூய்மை பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | 7 | வடக்கு பூங்கா | 1, 5, 9, 12, 14 DBC பணியாளர்கள் | 74 |
| 2 | 7 | நகராட்சி வார்டு அலுவலகம் II வாய்க்கால் ரோடு | 2, 3, 4, 6, 7, 8, 13 ராமர் எக்ஸ்டன்சன் MCC பணியாளர்கள் | 49 |
| 3 | 28 | நகராட்சி வார்டு அலுவலகம் III மொடச்சூர் | 22, 24, 25, 26, 27, 28, 29, 30 | 35 |
| 4 | 19 | ஜோதி நகர், OHT | 16, 17, 18, 19, 20, 21 | 61 |
| 5 | 11 | சத்தி நகர், OHT | 10, 11,15, 23 | 43 |
| மொத்தம் | | | | 262 |

காலை உணவு விபரம்

| வ.எண் | கிழமை | காலை உணவு |
|---|---|---|
| 1 | திங்கட்கிழமை | இட்லி (6x50g), மெதுவடை 50g) மற்றும் சாம்பார் (250g) |
| 2 | செவ்வாய்க்கிழமை | ரவா கிச்சடி (500g) மற்றும் சட்னி (250g) |
| 3 | புதன்கிழமை | வெண் பொங்கல் (500g) மற்றும் சாம்பார் (250g) |
| 4 | வியாழக்கிழமை | ரவா உப்புமா (500g) மற்றும் தேங்காய் சட்னி (100g) |
| 5 | வெள்ளிக்கிழமை | இட்லி (6x50g), மெதுவடை (50g) மற்றும் சாம்பார் (250g) |
| 6 | சனிக்கிழமை | ரவா பொங்கல் (500g) மற்றும் சாம்பார் (250g) |
| 7 | ஞாயிற்றுக்கிழமை | சேம்யா கிச்சடி (500g) மற்றும் சாம்பார் (250g) |

மேற்கண்ட விபரப்படி 262 எண்ணிக்கையிலான பணியாளர்களுக்கு ஆண்டொன்றுக்கு ஒரு நபருக்கு காலை உணவு ரூ.39 வீதத்தில் 262 x 39 x 365 = 37,29,570/- மற்றும் வாகன வாடகை 12 மாதம் X 80000 = 9,60,000 என மொத்தம் ரூ.46,89,570/- ஆண்டொன்றுக்கு செலவினம் மதிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு மூன்று வருடங்கள் ஆண்டொன்றுக்கு 5% உயர்வுடன் கணக்கிடப்பட்டதில் ரூ.1,55,40,000/- என மதிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.2697/2025/எச்1)

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்

31. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் கோபிசெட்டிபாளைம் நகராட்சிக்கு புதிய அலுவலகம் கட்டுவதற்காக ரூ.4.50 கோடி ஒதுக்கீடு செய்து அறிவிப்பு வழங்கியமைக்கு கோபிசெட்டிபாளையம் நகராட்சியின் நகர்மன்றத்தலைவர், நகர்மன்றத்துணை தலைவர், நகர்மன்ற உறுப்பினர்கள், நகராட்சி பொதுமக்கள், ஆணையாளர், நகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் சார்பாக தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியினை தெரிவித்து மன்றத்தில் பதிவு செய்யப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மன்றம் பதிவு செய்யலாம்.

32. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் 2025-2026ல் கீழ்க்கண்ட பணியினை செய்வதற்கு 07.11.2025 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விவரம் | ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள், ஓட்டுநர்கள், கொசு ஒழிப்புப்பணியாளர்கள் ஆகியவர்களுக்கு Catering Agency மூலம் மூன்று ஆண்டுக்கு காலை உணவு வழங்கும் பணி. | 1,46,81,000 | ஸ்ரீ சரவண பவன் ஒப்பந்ததாரர் | 5.65% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| | | | TPN Construction ஒப்பந்ததாரர் | 14.28% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டை விட அதிகமாக உள்ளதால் அதில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி கோரிய ஸ்ரீ சரவண பவன் அவர்களிடம் விலை குறைப்பு செய்து 26.11.2025 அன்று

தர கோரியதில் மேற்படி நிருவனத்திடம் இருந்து கீழ்கண்டவாறு விலை குறைப்பு செய்து ஒப்பந்தரார் 26.11.2025 அன்று பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விவரம் | ஒப்பந்தப்புள்ளியில் விலை குறைப்பு செய்து கொடுத்துள்ள விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள், ஓட்டுநர்கள், கொசு ஒழிப்புப்பணியாளர்கள் ஆகியவர்களுக்கு Catering Agency மூலம் மூன்றாண்டுகளுக்கு காலை உணவு வழங்கும் பணி | 1,46,81,000 | ஸ்ரீ சரவண பவன் ஒப்பந்ததாரர் | 0.82% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள ஸ்ரீ சரவண பவன் ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

33. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் அக்டோபர் மாதம் நடைபெற்ற சிறப்பு வார்டு கூட்டத்தில் தெருவிளக்கு மற்றும் மழைநீர் வடிகால் வசதி வேண்டி மனுக்கள் வரப்பெற்றுள்ளன. மேற்படி மனுக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திட ஏதுவாக கீழ்காணும் இடங்களில் தெருவிளக்கு மற்றும் வடிகால் அமைத்திட திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர் | உத்தேச மதிப்பீடு |
|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் சிவசண்முகம் வீதி, பச்சமலை ரோடு, சங்கரன் வீதி, சரவணா தியேட்டர் ரோடு குறுக்கு சந்து, கோடீஸ்வரன் நகர், ராமர் எக்ஸ்டென்சன் -7 பகுதிகளில் புதிய தெரு விளக்கு அமைக்க உத்தேச மதிப்பீடு | 1,00,000 |
| 2 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் வார்டு-1 ஸ்ரீராமபுரம், கிருஷ்ணா நகர், வார்டு-5 கோசலை நகர், வார்டு-6 ஆண்டவர் வீதி, வார்டு-12 பாரதி வீதி, காளியண்ணன் வீதி,வார்டு-14 முத்துவேலப்பன் வீதி, வார்டு-20 நாய்க்கன் காடு பகுதிகளில் புதிய மழைநீர் வடிகால் அமைக்க உத்தேச மதிப்பீடு | 15,00,000 |

மேற்படி செலவினத்தினை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

34. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் 2025-2026ல் கீழ்க்கண்ட பணியினை செய்வதற்கு 05.11.2025 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விவரம் | ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் -2,3,4,7,9, 10,12 மற்றும் 23 இல் சாலைகளில் உள்ள குழிகளை சீரமைக்கும் பணி மேற்கொள்ளுதல். | 9,00,000 | VBN Builderrs ஒப்பந்ததாரர் | 0.02% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | வி கே தங்கவேல் ஒப்பந்ததாரர் | 0.64% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள VBN Builderrs ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

35. இந்நகராட்சியின் மூலம் தெருநாய்களின் இனப்பெருக்கத்தினை கட்டுப்படுத்தும் பணி (ABC Programme) க்கு அறுவை அரங்கம், நாய்கள் அறை மற்றும் மருத்துவர் அறை தயார் நிலையில் உள்ளதால் இப்பணியினை விதிகளின்படி அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தை தேர்வு செய்து நகராட்சி பகுதியில் சுற்றித்திரியும் தெருநாய்களை பிடித்து அறுவை சிகிச்சை செய்து Rabies தடுப்பூசி போடும் பணிக்கு ஏற்கனவே நகர்மன்ற தீர்மான எண். 1152 நாள். 21.03.2025 மற்றும் நகர்மன்ற தீர்மான எண். 1312 நாள். 28.08.2025 இல் மொத்தம் ரூ. 10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு மேற்படி தொகையில் ரூ. 8.35 இலட்சத்திற்கு செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், இப்பணியை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியது அவசியம் என்பதால் அவசரஅவசியம் கருதி மீண்டும் 500 நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் வெறி நோய் தடுப்பூசி போடும் பணிக்கு ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட International Trust of Peace நிறுவனத்தின் மூலம் பணியை மேற்கொள்ள ரூ. 7.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந,க.எண்.2177/2025/எச்1)

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகராட்சி பொதுநிதியிலிருந்து இதற்கான செலவினத்தினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

36. திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016–ன் கீழ் தினமும் 5 டன்னிற்கு மேல் திடக்கழிவுகளை உற்பத்தி செய்து செயலாக்கம் செய்யும் நகராட்சிகள் தமிழ்நாடு மாசுகட்டுபாட்டு வாரியத்திடமிருந்து உரிய அங்கீகாரம் பெற வேண்டும் என நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.18674/2023/SBM – 2 நாள்.14.06.2023 கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்நகராட்சியின் மூலம் திடக்கழிவு மேலாண்மை செயலாக்க மையங்களுக்கு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுகட்டுபாட்டுவாரியம், பெருந்துறை, ஈரோடு அவர்களிடம் உரிய அங்கிகாரம் பெறப்பெற்றதை புதுப்பிக்க (Obtain Valid Authorization Renewal) பெற " Consultant " மூலம் விண்ணப்பிக்கவும், பணியினை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.25,000/–ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 2045 /2025/எச்1)

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகராட்சி பொது நிதியிலிருந்து இதற்கான செலவினத்தினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

37. நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித அறிவுரைகளின் படி, இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மரங்கள் நடுவதற்கு 800 எண்ணிக்கை நிர்ணயம் செய்யப்பட்டு அவற்றை நகராட்சியில் காலியாக உள்ள பார்க் வீதி, சாலை ஓரங்கள் மற்றும் உரக்கிடங்கு பகுதி ஆகியவற்றில் நட அறிவுறித்தியுள்ளதால், நகராட்சியின் மூலம் நர்சரி 1 ஏற்பாடு செய்து அவற்றில் மரக்கன்றுகள் வளர்த்து நகராட்சி பகுதியில் தேவையான இடங்களில் நடுவதற்கும், பொதுமக்களுக்கு இலவசமாக வழங்குவதற்கும் வழிவகை செய்ய ஏதுவாக நமது நகராட்சியில் ஒரு நர்சரி ஏற்பாடு செய்து அவற்றிற்கு தேவையான கட்டமைப்பு வசதியினை ஏற்படுத்திட தோராயமாக ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ. 1,75,000/–ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 2796 /2025/எச்1)

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகராட்சி பொது நிதியிலிருந்து இதற்கான செலவினத்தினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

38. மாண்புமிகு உச்சநீதிமன்ற வழக்கு எண் 5/2025 , 07.11.2025 நாளிட்ட உத்திரவின் படி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்:20383/2022/H2 நாள்:21/11/2025 –ல் நகராட்சி எல்லைக்குட்பட்ட பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களான அரசு மற்றும் தனியார் பள்ளிகள் , மருத்துவமனைகள் , பேருந்து நிலையம், விளையாட்டு மைதானம் , மற்றும் அரசு அலுவலகங்கள் ஆகிய பகுதிகளில் சுற்றித் திரியும் நாய்களை பிடித்து பாதுகாப்பான முறையில் பாராமரிக்க தங்கும் இடம் அமைத்திட தக்க நடவடிக்கை எடுத்திட உத்திரவிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட மொடக்சூர் வாரச்சந்தை பகுதியில் தற்காலிக பாதுகாப்பு தடுப்பு அமைத்து ஏற்கனவே உள்ள சிமெண்ட் சீட் கூரையுடன் கூடிய பழுதடைந்த கடைப் பகுதிகளில் சில மராமத்து பணிகள் செய்து கட்டமைப்பு வசதிகள் செய்ய தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.13.00 இலட்சம் ஆகும். இச்செலவீனத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.

39. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் அக்டோபர் மாதம் நடைபெற்ற சிறப்பு வார்டு கூட்டத்தில் தண்ணீர் வசதி வேண்டி மனு வரப்பெற்றுள்ளது. மேற்படி மனு தொடர்பாக நடவடிக்கை எடுத்திட ஏதுவாக கீழ்க்காணும் இடத்தில் தண்ணீர் வசதி அமைத்திட திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | வேலையின் பெயர் | உத்தேச மதிப்பீடு |
|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்–30 செங்கோட்டையன் காலனி 6வது வீதி பகுதியில் சின்டெக்ஸ் டேங்க் அமைத்து தண்ணீர் வசதி செய்திட உத்தேச மதிப்பீடு | 2,00,000 |

மேற்படி, செலவீனத்தை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

தலைவர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி

நாள். 19.11.2025